**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆலங்குளம்.**

**முன்னிலை: திருமதி.M.விஜயா, பி,ஏ.,பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

ஆலங்குளம்.

2026-ம் ஜீலை திங்கள், 09-ம் நாள், வியாழக்கிழமை

**அசல் வழக்கு எண்.10/2023**

**In**

**CNR.No.TNTSOC-000013-2023**

G. மாரியம்மாள் .. வாதி

/எதிர்/

S. ஸ்டீபன் பாஸ்கர் .. பிரதிவாதி

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.10/2023 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, வாதி தரப்பில் வழக்கறிஞர் **திரு. P.மாரிச்செல்வன்** அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் **திரு. C.சதீஷ்குமார்** அவர்கள் ஆஜராகியும், வந்த நிலையில் இவ்வழக்கானது கடந்த 25.02.2026 ம் தேதியன்று விசாரணையின் போது, இவ்வழக்கானது ஆலங்குளம் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வளாகத்தில் உள்ள சமரச மையத்திற்கு சமரசமாக பேசுவதற்கு அனுப்பி வைக்கப்பட்டது. பின்பு 09.07.2026 ம் தேதியன்று மேற்படி இந்த வழக்கின் இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜராகி வாதி மற்றும் பிரதிவாதி ஆகியோர் சேர்ந்து பேசி முடிக்கப்பட்டு, சமரச மையத்தில் வழக்கு தீர்ந்துவிட்டதாக வந்த சமரச அறிக்கையின் அடிப்படையில் இன்று (09.07.2026) இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்புரை**

வாதியால் இவ்வழக்கானது, பிராது தபசில் சொத்தினை வாதி அமைதியான முறையில் ஆண்டனுபவம் செய்து வருவதை, பிரதிவாதியோ, அவரது வகையாட்களோ இடித்தோ, வேறு எந்தவிதத்திலும் கட்டுமானம் கட்டியோ இடைஞ்சல் செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம் வழங்கக் கேட்டும், இவ்வழக்கு செலவுத் தொகை பிரதிவாதியிடமிருந்து வாதிக்கு கிடைக்கும் படிக்கு உத்தரவிடக் கேட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கானது கடந்த 09.07.2026 ந் தேதியில் ஆலங்குளம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் உள்ள சமரச மையத்தில் வாதி, பிரதிவாதி ஆஜரானார்கள். இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜரானார்கள். அன்றைய தினம் சமரச மையத்தில் வழங்கப்பட்ட அறிக்கை குறித்து உபயதரப்பினர்களிடம் விசாரிக்கப்பட்டது.

கடந்த 09.07.2026 ம் தேதி சமரச மையத்தில் இருதரப்பினருக்கும் இடையே ஏற்பட்ட பேச்சுவார்த்தையில், வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு ஆலோசணை வழங்கப்பட்டது. அதன் முடிவில், வாதிக்கும், பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்ட பொதுச்சுவர் அடுத்து தனிச்சுவர் எழுப்பி பிரதிவாதி வீடு கட்டிக் கொள்வார் என்றும், பின்னாளில் அந்த பொதுச்சுவர் இடிக்கப்பட்ட பின்னர் அதில் 1 1/2 அடி இடம் போட்டு, அதன் பின்னர் வாதி அவரது வீட்டுச்சுவரை எழுப்பச் சொல்ல வேண்டும் எனவும், மேற்படி 1 1/2 அடி இடத்தினை பார்த்து வாதியோ, பிரதிவாதியோ எவ்வித ஜன்னல்களும் வைக்கக் கூடாது என்றும், அந்த 1 1/2 அடி இடத்தில் வாதியும், பிரதிவாதியும் வெள்ளையடிக்க பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதில் ஒருவர் மற்றொருவரை எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது. பிரதிவாதி வீடு கட்டும் போது வாதி வீட்டிற்கு ஏதேனும் சேதம் ஏற்பட்டால் அதனை பிரதிவாதி அவரது சொந்த செலவில் சரி செய்து கொடுக்க வேண்டும் என்றும் இரு தரப்பினர்களும் சமரசமாக பேசி முடிக்கப்பட்டது. எனவே மேற்கண்ட சமாதான முடிவின் படி இவ்வழக்கானது முடித்து வைக்கப்படுகிறது என எழுதிக் கொடுக்கப்பட்டு, இரு தரப்பினரும் ஒப்புக் கொண்டு கையொப்பம் செய்துள்ளனர்.

அதன்படி இன்று (09.07.2026) சமரச மையத்தின் அறிக்கையில் கண்டுள்ளபடி வழக்கை முடித்துக் கொள்ள உபயதரப்பினர்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றும், சமரச மைய அறிக்கையில் உள்ள வாசகங்கள் யாருடைய துாண்டுதலின் பேரிலோ அல்லது துர்போதனையின் பேரிலோ ஏற்பட்டதல்ல என்றும், மேற்படி வாசகங்கள் அனைத்தும் உபயதரப்பினர்கள் விருப்பப்படியே எழுதப்பட்டது என்றும், சமரச மைய அறிக்கையில் கண்டுள்ளபடி வழக்கை முடித்துக் கொள்ள உபயதரப்பினர்களுக்கு எந்த

ஆட்சேபணையும் இல்லை என்றும் உபயதரப்பினர்கள் வாய்மொழியாக சொன்னதன் அடிப்படையில் சமரச மையத்தின் அறிக்கையில் கண்ட சரத்துக்கள்படி வழக்கானது முடிக்கப்படுகிறது. மேலும் சமரச மைய அறிக்கை தீர்ப்புரையின் ஒரு பாகமாக கருதிட உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை குறித்த உத்தரவு இல்லை.

இத்தீர்ப்புரை 2026-ஆம் ஆண்டு, ஜீலை திங்கள் 09-ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M VIJAYA Digitally signed by M VIJAYA Date: 2026.07.09 21:19:21 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

ஆலங்குளம்.

<u>இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-</u> இல்லை

M VIJAYA Digitally signed by M VIJAYA Date: 2026.07.09 21:19:26 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

ஆலங்குளம்.

-------------------------

மா.உ.நீ. ஆலங்குளம்

அ.வ.எண். 10/2023

வரைவு/நேரிய தீர்ப்புரை

நாள்: 09.07.2026

----------------------------